04000116

# TAMIL

*Maximum Marks: 80*
*Time Allotted: Three Hours*
*Reading Time: Additional Fifteen minutes*

**Instructions to Candidates**

1. You are allowed an **additional fifteen minutes** for **only** reading the question paper.
2. You must **NOT** start writing during reading time.
3. This question paper has **11 printed pages and one blank page**.
4. It is divided into **two sections: Section A and Section B**.
5. It has **fifteen questions** in all.
6. **Section A** has **three questions.** All questions are compulsory.
7. While attempting **Multiple Choice Questions** in Section A, you are required to **write only ONE option as the answer**.
8. **Section B** has **twelve questions**. You are required to attempt **any four** questions in this section on **any three** out of the four prescribed textbooks.
9. The intended marks for questions are given in brackets [ ].

**Instruction to Supervising Examiner**

1. Kindly read **aloud** the Instructions given above to all the candidates present in the examination hall.


© *Copyright reserved.*

## SECTION A
## LANGUAGE - 40 MARKS

**Question 1** **[15]**

**Write a composition in approximately 400 words in Tamil on *any one* of the topics given below.**

**கீழ்க்கண்டவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 400 வார்த்தைகளில் ஒரு கட்டுரை தமிழில் எழுதுக.**

(i) 'புவி வெப்பமடைதல்' என்னும் தலைப்பில் அதற்கான காரணங்கள், விளைவுகள் மற்றும் பூமியைப் பாதுகாக்கும் வழிமுறைகள் இவற்றை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

(ii) 'கல்வியில் தொழில் நுட்பத்தின் பங்கு' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

(iii) உனக்குப் பிடித்த கவிஞர் அல்லது தலைவர் யார்? ஏன்? அவரிடமிருந்து நீ என்ன கற்றுக்கொண்டாய்? எவற்றைப் பின்பற்றுகிறாய் என்பதைப் பற்றி விளக்கி எழுதுக.

(iv) 'கைப்பேசி நம் உறவு முறைகளை நெருக்கமாக வைத்துக்கொள்ள பெரிதும் உதவுகிறது' – இக்கருத்தை ஏற்று அல்லது எதிர்த்து ஒரு கட்டுரை வரைக.

(v) இந்திய ஜனநாயகத்தில் மாணவர் பங்கு என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

(vi) கீழ் வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றுக்கு மூலச் சிறுகதையை எழுதுக:

   (a) "நான் தட்டப்பட்ட என் வீட்டுக் கதவைத் திறந்தபோது......." எனத் தொடங்கும் ஒரு மூலச் சிறுகதை எழுதுக.

   (b) ".........நான் கண் விழிக்கும் போது இது எனது கனவு என உணர்ந்தேன்" என முடியும் ஒரு சிறுகதை எழுதுக.

**Question 2**

**Read the passage given below carefully and answer the questions that follow, using your own words in Tamil.**

**பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துணர்ந்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி:**

சமுதாயத்தில் சரிபாதி பெண்கள். அவர்கள் கல்வியறிவு பெற்று உயர்ந்தால் சமுதாயம் உயரும்.வீடு உயர்ந்தால் நாடு உயரும்.வீடு உயர பெண்கள் உயர வேண்டும்.பெண்களாகப் பிறக்கத் தவம் செய்திருக்க வேண்டும்.பெண்களாகப் பிறக்க மாதவம் செய்திருக்க வேண்டும்.உலகில் அவர்களால்தான் அறங்கள் வளர்கின்றன என்கிறார் கவிமணி.

பண்டைக் காலத்தில் பெண்கள் நன்கு முன்னேறி இருந்தனர்.மண்பாண்டம் செய்யும் குயவர் குலத்தில் பிறந்த பெண்கள் கூட கல்வி கற்றுக் கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தனர்.அரசி பூதப் பாண்டியன் தேவியும் கவியரசியாகத் திகழ்ந்தாள். ஔவையார் அதியமானுக்காகத் தூது சென்று, போரை நிறுத்தினார். இவ்வாறு சங்க காலத்தில் பெண்கள் முன்னேற்றம் சிறப்பாக இருந்தது.

இடைக் காலத்தில் சமண, பௌத்த மதங்களின் செல்வாக்கு அதிகமானதால் பெண்கள் நிலை மாறியது. பெண் கல்வி மறுக்கப் பட்டது.பெண்களை அடிமைகளாக நடத்தும் நிலை வந்தது.சைவ,வைணவ சமய மறுமர்ச்சியால் பெண்கள் முன்னேற்றம் கொஞ்சம் கொஞ்சமாக அரும்பத் தொடங்கியது.

பாரதி கூறிய படி இக்காலத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் கல்வி அறிவு பெற்று சிறப்பாக விளங்குவது மகிழ்ச்சிக்குரியது. மருத்துவம், பொறியியல், காவல்துறை, விமானம் ஓட்டுதல் அணுவியல், தகவல் தொழில் நுட்பம் முதலிய அரிய துறைகளிலும் பெண்கள் பங்கு கொண்டு சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர்.

"கல்வி இல்லாத பெண் களர் நிலம்; அங்கே புல் விளைந்திடலாம்; நல்ல புதல்வர்கள் பிறப்பதில்லை" என்பது பாரதிதாசன் கருத்து.எனவே பெண்களின் முன்னேற்றம் வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்லது.

கேள்விகள்:

(i) பண்டைக் காலத்தில் பெண்களின் முன்னேற்றம் எவ்வாறு இருந்தது? [3]

(ii) தற்காலப் பெண்களின் நிலை என்ன? [3]

(iii) இடைக் காலத்தில் பெண்களின் நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை? [3]

(iv) கீழ்க் கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(a) ..........பிறக்க மாதவம் செய்திருக்க வேண்டும் என்கிறார் கவிமணி. [1]

(1) மக்களாகப்

(2) பெண்களாகப்

(3) ஆண்களாகப்

(4) குழந்தைகளாகப்

(b) அதியமானுக்காகத் தூது சென்று, போரை நிறுத்தினார் ........... [1]

(1) ஔவையார்

(2) கவிமணி

(3) பாரதி

(4) கம்பன்

(c) கல்வி இல்லாத பெண் ........ [1]

(1) நன்னிலம்

(2) உவர்நிலம்

(3) களர்நிலம்

(4) வளர்நிலம்

(v) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

(a) சமண,பௌத்த மதங்களின் செல்வாக்கால் இடைக்காலத்தில் .............. மறுக்கப்பட்டது. [1]

(1) மேற்கல்வி

(2) ஆண்கல்வி

(3) மருத்துவக் கல்வி

(4) பெண்கல்வி

(b) பாரதி கூறியபடி ........... நிகராகப் பெண்கள் கல்வி அறிவு பெற்று சிறப்பாக விளங்குகின்றனர். [1]

(1) மக்களுக்கு

(2) பெண்களுக்கு

(3) ஆண்களுக்கு

(4) மேல்நாட்டினர்க்கு

(c) பெண்கள் கல்வி அறிவு பெற்று உயர்ந்தால் ......... உயரும். [1]

(1) நகரம்

(2) சமுதாயம்

(3) கிராமம்

(4) அரசாங்கம்

**Question 3**

**(A) Do as directed.**

**கூறியபடி செய்க.**

(i) கொடுக்கப்பட்ட வாக்கியத்தை பிழை திருத்தி எழுதுக. [1]
கண்ணன் வரைந்த படங்கள் மிகவும் அழகாக இருக்கிறது.

(ii) கொடுக்கப்பட்ட வாக்கியத்தை பிழை திருத்தி எழுதுக [1]

தமிழ் ஆசிரியர் நேற்று பாடம் நடத்துவார்.

(iii) பிழை நீக்கிய வாக்கியத்தை எடுத்து எழுதுக [1]

(a) மனித மணத்தின் சக்தி அலப்பரிது.

(b) மணித மனத்தின் சக்தி அளப்பறிது.

(c) மனித மனத்தின் சக்தி அளப்பரிது.

(d) மனித மனத்திண் சக்தி அழப்பரிது.

(iv) சரியான வாக்கியத்தை தேர்ந்தெடுத்து எழுதுக: [1]

(a) மழை இன்றி குளங்கள் காய்ந்தன.

(b) மழை இண்றி குளங்கள் காய்ன்தன.

(c) மழை இன்றி குலங்கள் கய்ந்தன.

(d) மலை இன்றி குலங்கல் காய்ந்தன.

(v) சரியான வாக்கியத்தை தேர்ந்தெடுத்து எழுதுக: [1]

(a) முயண்றால் எந்தச் செயலயும் செய்துவிடலாம்.

(b) முயன்றால் என்தச் செயளையும் செய்துவிடலாம்.

(c) முயன்றாள் எந்தச் செயலையும் செய்துவிடளாம்.

(d) முயன்றால் எந்தச் செயலையும் செய்துவிடலாம்.

**(B) Use the idioms in the sentence as per the instructions given.**

**வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**

(i) தொன்றுதொட்டு [1]

(ii) மனத்திரை [1]

சரியான மரபுச் சொல்லை தேர்ந்தெடுத்து நிரப்புக:

(iii) பதவி உயர்வு பெற சிலர் மேலதிகாரிகளிடம் .........போடுவர் [1]

(a) நொண்டிச் சாக்கு

(b) கூழைக் கும்பிடு

(c) அடிதடி

(d) போற்றிப் புகழ்ந்து

(iv) அண்ணன் தம்பி இருவரும் .......... சேர்ந்தே இருப்பர். [1]

(a) அருமை பெருமையாய்

(b) நகமும் சதையும் போல்

(c) ஊணுறக்கமின்றி

(d) தோள் கொடுத்து

(v) அறிஞர் அண்ணா மேடைகளில் பேசும் போது .......... பேசுவார். [1]

(a) ஊரும் பேரும்

(b) அல்லும் பகலும்

(c) கண்ணும் கருத்துமாக

(d) மடை திறந்த வெள்ளம் போல்

## SECTION B
## LITERATURE - 40 MARKS

*Answer **four** questions from this section on **any three** out of the four prescribed textbooks.*

பின்வரும் வினாக்களுள் ஏதேனும் நான்கனுக்கு உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மூன்று பாடப் புத்தகங்களிலிருந்து விடையளி

## பொதுத் தமிழ் (PODHU TAMIL)

**Question 4**

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'

(i) அறிவு யாரால் அழிக்க முடியாத அரண் என வள்ளுவர் கூறுகிறார் ? [1]

(ii) எது பேதைமை ? எது அறிவுடையார் செயல் ? [2]

(iii) எல்லாம் உடையவர், ஒன்றுமில்லாதவர் - யார்? யார்? [2]

(iv) 'அறிவுடைமை' பற்றி வள்ளுவர் கூறும் ஏதேனும் ஐந்து கருத்துக்களை எழுதுக. [5]

**Question 5** [10]

'மறப்பரிது நும்நன்றி' என்று கூறிய அன்னத்திடம் வேலன் கூறிய எழுச்சியுரைகளை இருபது வரிகளின் மிகாது எழுதுக.

**Question 6** [10]

குழந்தைத் தொழிலாளர் அவல நிலையைக் கவிஞர் அப்துல் ரகுமான் கூறுமாறு தொகுத்து வரைக.

## கதைக் கோவை (KADHAI KOVAI)

**Question 7**

'நட்ட கல்லைத் தெய்வம் என்று' பாட்டு அவன் மனத்தில் ஒலித்தது.

(i) பூந்தோட்டத்துச் சாமி எங்கு வாழ்ந்து வந்தான்? ஏன்? [1]

(ii) மாணிக்கம் செட்டியாரின் மனைவிக்கு பூந்தோட்டத்துச் சாமியார் கூறிய ஆறுதல் என்ன?அதற்கு அவள் கூறிய பதில் என்ன? [2]

(iii) பூந்தோட்டத்துச் சாமியின் தோற்றம் எவ்வாறு இருந்தது? [2]

(iv) கோயில் மண்டபத்தில் கீதை சொற்பொழிவு நடத்திய பண்டிதரின் ஞான வாசகங்கள் யாவை? [5]

**Question 8** [10]

மகன் - இக்கதை மாந்தரைப் பற்றித் திறனாய்வு செய்து எழுதுக.

**Question 9** [10]

ஓர் உல்லாசப் பயணம் - இச்சிறுகதையைக் கருப்பொருளும் சுவையும் சிதையாமல் சுருக்கி எழுதுக.

## சினேகிதி (SINEKITHI)

**Question 10**

"நான்கு சிறுமிகளுக்கு மத்தியில் ஒரே மரப்பாச்சி அகப்பட்டால் அது படும் பாட்டை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?"

(i) துரையின் பால்ய சினேகிதியின் பெயர் என்ன?அவள் துரையைவிட எத்தனை வயது பெரியவள்? **[1]**

(ii) துரையின் பால்ய சிநேகிதி எந்த வகுப்பு வரை படித்தாள்?அவளுக்கு ஏன் மாப்பிள்ளை கிடைக்கவில்லை? **[2]**

(iii) தன் பால்ய சிநேகிதியைப் பார்த்து விட்டுத் திரும்பும் போது துரையிடம் அவள் என்ன கூறினாள்? **[2]**

(iv) சிநேகிதர்,சிநேகிதி,சிநேகிதம் இவற்றைப் பற்றி அகிலன் துரை மூலமாகக் கூறியது என்ன? **[5]**

**Question 11** **[10]**

தன் புதினத்தில் புதுமைத் திருமணத்தைப் புகுத்த நினைத்துள்ள அகிலன் வெற்றி பெற்றுள்ளாரா? – ஆய்க.

**Question 12** **[10]**

லலிதாவின் பண்பு நலன்களைக் கொண்டு அவள் இந்நாவலின் கதாநாயகியாக இருக்கத் தகுதியானவள்தான் என்று ஆராய்ந்து எழுதுக.

## யான் கண்ட இலங்கை (YON CANDA ELANGI)

**Question 13**

"இப்போது விமான நங்கை எங்கள் பக்கம் வந்து அழகாக அச்சடித்த ஒரு தாளில் இடையிடையே பென்சிலால் எழுதி நிரப்பியதை என் கையில் நீட்டினாள்."

(i) தமிழ் நாட்டில் உப்புச் சத்தியாகிரகம் நடந்த கடற்கரை எது? அதன் தமிழ்ப் பெயர் என்ன? [1]

(ii) இலங்கையில் எந்தெந்த நோய்கள் கிடையாது என்று தணிக்கை அதிகாரி மு.வ.விடம் கூறினார்? [2]

(iii) "சைனாவில் சென்னை பஜார் உண்டா?" என்று கேட்ட மு.வ.விடம் அவர் ஆசிரியர் கூறிய பதில் என்ன? [2]

(iv) விமான நங்கை கொண்டு வந்து கொடுத்த தாளில் குறிப்பிடப் பட்டிருந்தவை யாவை? [5]

**Question 14** [10]

இலங்கை அருவிகள், நயாகரா அருவி இவற்றை ஒப்பிட்டு மு.வ.எழுதி உள்ளவற்றைத் தொகுத்து எழுதுக.

**Question 15** [10]

டாக்டர் மு.வ. அவர்கள் சென்னையிலிருந்து கொழும்புவிற்கு மேற்கொண்ட விமானப் பயணத்தை வருணித்து எழுதுக.